

# 21

# ஹதீஸின் பிரிவுகள்

இஸ்லாத்தின் பிரதான இரு அடிப்படைகளுள் அஸ்ஸுன்னா எனப்படும் ஹதீஸ்கள் இரண்டாவதாகும். அல் குர்ஆனுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தரவாதம் போன்று அஸ்ஸுன்னாவுக்கு வழங்கப்படவில்லை. ஆதலால், அவற்றைப் பாதுகாக்கும் பணியை ஸஹாபாக்கள் தொடக்கம் இஸ்லாமிய சமூகத்தின் துறைசார் அறிஞர்கள் முன்னெடுத்தனர். ஸஹாபாக்கள் காலத்தில் ஹதீஸ்கள் வாய்வழியாகவே பரிமாறப்பட்டு வந்தன. அவற்றைத் தொகுக்கும் பணி தாபிஈன்கள் காலத்திலேயே முக்கியத்துவம் கொடுத்து மேற்கொள்ளப்பட்டது. ஏனெனில், பிற்காலத்தில் ஹதீஸ்களுக்கிருந்த அங்கீகாரத்தைப் பயன்படுத்திப் பல்வேறு பிரிவினர் தத்தமது அணிக்குப் பலம் சேர்க்க ஹதீஸ்களைப் புனைந்தனர். இவ் அபாயத்திலிருந்து ஸுன்னாவையும் முஸ்லிம் சமூகத்தையும் பாதுகாக்கும் பெரும் பணியை அவ்வக்கால ஹதீஸ் துறை அறிஞர்கள் மேற்கொண்டனர். அதனடிப்படையிலேயே ஹதீஸ்களைத் தரம் பிரித்து அவற்றைத் தொகுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஹதீஸ் துறையின் பாதுகாப்புக்கும் விருத்திக்கும் ஸஹாபாக்களும் தாபிஈன்களும் அவர்களைத் தொடர்ந்து துறைசார் முன்னணி அறிஞர்கள் பலரும் அரும் பணியாற்றியுள்ளனர். அவர்களுள் அன்னை ஆஇஷா, அபூஹுரைரா, அப்துல்லாஹ் இப்னு உமர், அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹும் போன்ற ஸஹாபாக்களும், இமாம் அப்துல்லாஹ் பின் முபாரக், இமாம் இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரீ, ஸஈத் இப்னு முஸய்யப், இமாம் புகாரீ, இமாம் முஸ்லிம் ரஹிமஹுமுல்லாஹ் போன்ற பலரும் குறிப்பிடத்தக்கோராவர்.

காலத்தின் தேவையும் ஹதீஸின் பாதுகாப்பும் கருதி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுள் அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இஸ்னாத் (ஹதீஸ் அறிவிப்பாளர் தொடர்) அடிப்படை அறிமுகப்படுத்தப்பட்டதைக் கொள்ளலாம். இவ்வடிப்படையைப் பேணுவதன் மூலம் ஏனைய எல்லா சமூகங்களைப் பார்க்கிலும் முஸ்லிம்கள் சிறந்து விளங்குகின்றனர். அத்துடன் ஸுன்னாவின் நம்பகத் தன்மையும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படுகின்றது. இஸ்னாதை ஒட்டியதாக அதற்குத் துணையாக

அஸ்மாஉர் ரிஜால், இல்முல் ஜரஹ் வத்தஃதீல் போன்ற விஷேட துறைகள் வளர்ச்சி பெற்றன. இவையனைத்தையும் தழுவியதாகவே **உலூமுல் ஹதீஸ்** அல்லது **இல்முல் முஸ்தலஹ்** எனும் துறை காணப்படுகிறது.

இஸ்னாத் எனும் அறிவிப்பாளர் தொடரில் இடம்பெறும் ராவிகள் எனப்படும் அறிவிப்பாளர்களின் எண்ணிக்கை, அவர்களின் தொடர் இடையறாமை, அவர்களது மனனம், நம்பகத்தன்மை, மார்க்கப் பின்னணி போன்ற விடயங்களில் அவர்கள் கொண்டிருக்கும் சிறப்புத் தகைமைகளை அடிப்படையாகக் கொண்டே ஹதீஸ்கள் **ஸஹீஹ், ஹஸன், ழஈப், மவ்ழூஃ** என தரப்படுத்தப்படுகின்றன.

***ஹதீஸ் ஸஹீஹ் (ஸஹீஹான ஹதீஸ்):*** இவ்வகையான ஹதீஸ்கள் தேவையான அனைத்துத் தகைமைகளையும் உள்ளடக்கியதாகக் காணப்படும். இதில் ராவிகள் தொடர் இடையறாதிருப்பதுடன் அதில் இடம்பெற்றுள்ள அனைத்து ராவிகளும் நம்பிக்கைக்குரியவர்களாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பர். ஸஹீஹ் எனும் அந்துஸ்துப் பெற்ற ஹதீஸ்களை ஏற்றுக் கொள்வதும் அதனை வாழ்வில் கடைப்பிடிப்பதும் முஸ்லிம்கள் மீது கட்டாயமாகும். அதனை நிராகரிப்பது இறைத் தூதை நிராகரிக்கும் வழிகேட்டைச் சார்ந்ததாகும்.

***ஹதீஸ் ஹஸன்:*** ஸஹீஹான ஹதீஸுக்குரிய தகைமைகளைப் பெற்றிருந்தும் தொடரில் இடம்பெறும் ராவிகளுள் ஒருவர் ஒப்பீட்டளவில் மனன சக்தியில் குறைந்த (ஆயினும் பலவீனமற்ற) வராயிருக்கும் பட்சத்தில் அந்த ஹதீஸ் ஹஸன் தரத்திற் கணிக்கப்படும். இவ்வகை ஹதீஸ்களும் ஸஹீஹைப் போன்றே ஆதாரமாகக் கொள்ளல், நடைமுறைப்படுத்தல் போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்படும்.

***ழஈப்:*** ஹஸன் எனும் தரத்திலுள்ள ஒரு ஹதீஸுக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளில் குறை காணப்படும் பட்சத்தில் அது பலவீனமான (ழஈபான) ஹதீஸ் வகையைச் சாரும்.

**ஹதீஸ்களை வகைப்படுத்தல்:**



இவ்வாறு ஹதீஸ்களை ஒன்றுதிரட்டி அவற்றை மிகக் கவனமாக ஆராய்ந்து அவற்றைத் தெளிவுபடுத்தும் பணியில் பெரும் எண்ணிக்கையிலான அறிஞர்கள் அன்று முதல் இன்று வரை அர்ப்பணிப்புடன் ஈடுபடுகின்றனர். அவர்களது பணிகளின் வெளிப்பாடாக இலட்சக் கணக்கான நபிமொழிகளைப் பல வடிவங்களில் இன்று இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியுமாயுள்ளது.

அவ்வாறு பணிசெய்த மேதைகளுள் ஆறு முன்னணி ஹதீஸ் நூற்களின் இமாம்கள் விசேடமானவர்களாவர். இவர்களது தொகுப்புக்கள் **அஸ் ஸிஹாஹுஸ் ஸித்தா** என்றும் **குதுபுஸ் ஸித்தா** என்றும் **ஸஹீஹைன் வஸுனன் அர்பஆ** என்றும் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் அல் குர்ஆனை அடுத்து ஸஹீஹ் புஹாரி மற்றும் ஸஹீஹ் முஸ்லிம் (ஸஹீஹைன்) ஆகிய இரு ஹதீஸ் கிரந்தங்களும், அவற்றுக்கு அடுத்த நிலையில் திர்மிதீ, இப்னு மாஜா, அபூதாவூத், நஸாஈ ஆகிய நான்கு கிரந்தங்களும் (ஸுனன் அர்பஆ) கொள்ளப்படுகின்றன. இவை போன்ற வேறு ஹதீஸ் தொகுப்புக்களும் காணப்படுகின்றன.

**எனவே, ஹதீஸின் முக்கியத்துவத்தையும் சிறப்பினையும் விளங்கி ஏற்று அவற்றை எமது வாழ்வில் நடைமுறைப்படுத்த முயற்சிப்போமாக.**

### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

السُّنَّةُ    الحَدِيْثُ    الصِّحَاحُ السِّتَّةُ    الكُتُبُ السِّتَّةُ    إِسْنَادٌ    صَحِيْحَيْنِ

صَحِيْحٌ    حَسَنٌ    مَوْضُوْعٌ    مَقْبُوْلٌ    مَرْدُوْدٌ    أَسْمَاءُ الرِّجَالِ

عِلْمُ الْجَرْحِ وَالتَّعْدِيْلِ    ضَعِيْفٌ

### பயிற்சி

1. அஸ்ஸிஹாஹுஸ் ஸித்தா அல்லது குதுபுஸ் ஸித்தாவில் உள்ளடங்கும் ஹதீஸ் நூற்களைக் குறிப்பிடுக.
2. ஸஹீஹான ஹதீஸ் என்றால் என்ன?
3. ஸஹீஹைன் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
4. ஹதீஸ் துறையில் அதிகம் ஈடுபாடுகாட்டிய ஸஹாபாக்கள் இருவரைக் குறிப்பிடுக.
5. இஸ்னாத் என்ற பதம் எதனைக் குறிக்கின்றது?